
# உழைப்பின் வெற்றியாளர்கள்.

2017



அனுசரணை : காவேரி கலா மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பின் வெற்றியாளர்கள்! 2017

அனுசரணை - காவேரி கலா மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிசா

மகிழ்ச்சியும் சந்தோசமும் என் வாழ்கையில் குடிகொண்டுள்ளது



எனது இழந்துபோன துன்பமான வாழ்வையும் சோகமான காட்சிகளையும் என் மனம் மறந்து கொள்ள முடியாமல் தவித்ததொரு காலம் அந்தக் காலப்பகுதியிலிருந்து மீண்டு வருவதற்கென கரம் கொடுத்து என்னை அரவணைத்த காவேரி கலா மன்றத்தையும் என்னை என்றும் அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து காத்துவரும் அம்மம்மா அப்பப்பா மற்றும் சித்தி என்பவர்கள் என் வாழ்க்கையின் கண்காணிப்பாளர்கள் ஆவார்கள் அவர்களின் வியர்வையும் விடாமுயற்சியுமே இன்று என்னை O/L வரை படிக்க வைத்துள்ளது எனது அன்பான உறவுகளுடன் எனது பசுமையான இயற்கை சார் சூழலுடன் ஒன்றித்து என் வாழ்கைப் பயணத்தை நகர்த்தி செல்லும் இச்சந்தர்ப்பத்திலிருந்து கடந்து வந்த எனது பார்வையினை உற்று நோக்கும் போது.

2000ம் ஆண்டு காட்டுப்புலம் சுழிபுரம் என்னும் புண்ணிய பூமியின் புதல்வியாக அவதரித்து அபிசா எனும் நாமத்துடன் எழுந்தேன். தாயின் அரவணைப்பில் வளர்ந்துவரும் காலப்பொழுதில் என் கல்வி் பயணத்தை ஆரம்பித்து வைக்க TLMEWநிறுவனத்தின் உ தவியுடன் காவேரி கலாமன்றம் முன்வந்து கல்விப் பயணத்தை கண்ணியமாக தொடர்ந்த நான் தற்போது க.பொ.த சாதாரண பரீட்சை எழுதி பெறுபேற்றுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்கின்றேன். கடந்த 2013ம் ஆண்டு சுகயீனம் காரணமாக எனது தாயாரை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தாயின் பிரிவைத் தாங்கமுடியாது நான் துடித்தேன். என் எதிர் கால வாழ்கை தொலைந்ததாகவே கருதி ஏங்கி நின்றேன்.

ஏக்கத்தின் மத்தியில்TLMEWநிறுவனத்தின் உதவியுடன் காவேரி கலாமன்றம் எனது சொந்த வளாகத்தை பசுமையாக திட்டம் தீட்டியது குழாய் நீர் கிணறு ஊடாக எனது குடியிருப்பு காணியில் வீட்டுத்தோட்டம் செய்ய எனது அம்மம்மா அப்பப்பா பெரியம்மா உதவியாகச் செயற்பட்டார்கள். தென்னங்கன்று நாட்டப்பட்டு அதற்கிடையில் TLMEWமிளகாய்த் தோட்டம் மிகச்செழிப்பாக பயன்தந்துள்ளது தற்போது தென்னங் கன்றுகளும் வளர்ந்து செழிப்பாக உள்ளது.

எனது மனச்சோர்வு மனக்கஸ்ரம் எல்லாவற்றையும் கழிப்பதற்கு எனது சிறுதோட்டம் எனக்கு சந்தோசத்தை தருகின்றது. எனது எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்ய ஓரளவு சிறுதோட்டம் பங்களிப்பு செய்யும் என்பதே எனது நம்பிக்கை. எனக்கு இவ்வுதவித்திட்டங்களை ஏற்பாடு செய்து தந்துதவியKKM மற்றும் TLMEW நிறுவனத்திற்கும் எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Abisha*

I am Abisha , from Kadupulam Chulipuram, I was born in year 2000. I lost my mother 4 years ago and I was deeply distressed. At this stage TLMEW& KKM gave me support and strength to continue my education and now I have sat For G.C.E ordinary level and waiting for results. KKM made it possible by providing Tube well within my land. by which my grandparents and aunt was able to plant and water coconut trees and also in between the coconut trees lots of vegetables which bring us enough money to survive .

The green vegetation gives me lots of peace and pleasure to be among it. I am hoping this plantation will bring enough money for the future. I am very grateful & thankful to KKM & TLMEW for their services they have provided.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப.ஐங்கரன்

காட்டுப்புலம் சுழிபுரம் கிராமத்தில் வசித்து வரும் நான் தற்போது தோட்டச் செய்கையினை மிக சிறப்பாக மேற்கொண்டு வருகிறேன். எனது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு பலருக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்கக்கூடிய நிலையில் எனது நிலை உயர்ந்துள்ளது.ஆனபோதும். எனது கடந்து வந்த பாதையினை திரும்பிப்பார்க்கும் போது. நான் தொழில் வசதிகள் எதுவும் இன்றி மேசன், கூலியாகவும் தோட்ட வேலைகளுக்கு கூலியாகவும் சென்று கிடைக்கப்பெறும் வருமானங்களை கொண்டே எனது குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு வந்தேன். பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலைகள் தினமும் கிடைக்காது பல சிரமங்கள் பட்டு வந்தேன். கடந்த 2015ம் ஆண்டு TLMEW நிறுவனத்தின் உதவியால் காவேரி கலாமன்றத்தினால் கொள்முதல் செய்து கொள்ளப்பட்ட 10 பரப்பு அளவாக தோட்டம் செய்வதற்கான காணி தோட்டச் செய்கைக்காக எனக்கு கிடைத்தது.

இதன் பின்னர் மரவள்ளி வாழை, முருங்கை, தென்னை, போன்ற பயிர்கள் செய்கை செய்து கொள்ளப்பட்டதுடன் கத்தரி கச்சான் சோளம் வெங்காயம் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு ஆரம்ப காலகட்டத்தில் கத்தரித் தோட்டத்தில் பெரியளவில் நட்டம் ஏற்பட்டு சலிப்படைந்து போன போது தொடர்ந்து விடாமுயற்சியாய் முயற்சித்து அதன் ஊடாக பெருமளவு இலாபம் கிடைக்கும் வாய்ப்பினை அடைந்தேன். பின் வெங்காயம் பயிரிடப்பட்டு அறுவடை செய்து விற்பனை செய்யப்பட்டது. செலவு செய்யப்பட்ட தொகையினை தவிர்த்து மூன்று மாதத்தில் சுமார் 100000 இலச்சம்ரூபாவினை இலாபமாக பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை அடைந்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மேலதிகமான காணிகள் குத்தகைக்கு எடுத்து வெங்காயப் பயிர்செய்கையினைச் செய்வதற்கு இச்செயற்பாடு எமக்கு தூண்டுதலாக அமைந்துள்ளது. நான் சிலருக்கு வேலைவாய்ப்பினை இடையிட்டு வழங்கூடிய நிலையினை தற்போது அடைந்திருப்பதையிட்டு பெருமைப்படுகின்றேன். நான் தினமும் கூலித் தொழில் செய்வதற்கே தொழில் தட்டுப்பாடு தொழில்இன்றி இருந்து வறுமை வாட்டி வேறுமையாக்கியே நிலை மாறி இன்று நானும் நாளாந்தம் வேலை செய்து கொண்டு. ஒருசிலருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கக்கூடிய நிலையினையிட்டு TLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலாமன்றத்திற்கும் அதன் இயக்குனர் வண T.S.யோசுவா போதகர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## P.Ingaran

I am from Kadupulam,Chulipuram at the moment I am glad to be in a position to do farming in a very elaborate and established way . Not only I am doing very well. I am able to give employment to a lot of people.

when I look back , I am so thankful to KKM & TLMEW , I was looking for day to day jobs. could be in the fields or may be as a mason- whatever I could get , whenever I Could get, I was happy. happy to spent it. some days I could not get any jobs and family had to manage without much to eat ;

Year 2015 – KKM & TLMEW gave me 10larch am land to cultivate. It was great, I started cultivating all sorts vegetables name it- I did cultivate there occasional failure was there but I did not give up . I did persevere and I stetted reaping the benefit of my hard work. I did so well and I have become very enthusiastic that I have taken more lands on lease and I am cultivating not only I am working. I havegiven employment to many others too. Many thanks to KKM &TLMEW not only I am doing very well. I can help others too, Thanks to Rev. T.S.johsuva & his team.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.தனுசா

பாண்டவெட்டை சுழிபுரத்தில் வசித்து வரும் சு.தனுசா ஆகிய நான் தற்போது எனது சொந்தக்காணியில் தென்னைப் பயிர்செய்கை செய்து வருவதுடன் தென்னைச் செய்கைக்கிடையில் ஊடுபயிர்செய்து வருகின்றேன். எனது வாழ்கைப்பயணத்தில் சிறுவயதிலேயே கணவனை இழந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தேன். அன்றைய நிலையில் எனது எதிர்கால வாழ்க்கை கனவுகள் எல்லாவற்றையும் இழந்து விட்டேன். எனது அன்பான ஆதரவான கணவனை இழந்து விட்டேன். எனது பிள்ளைகளை எவ்வாறு வளர்த்துக்கொள்வேன் எவ்வாறு படிப்பித்துக்கொள்வேன். எல்லாமே முடிந்து போச்சு என்ற ஏக்கத்துடன் வாழ்நாளை கடந்து வந்த என்வாழ்கைப் பயணத்தின் இடையிலே சிறு வசந்த காற்று வீசிய போது TLMEW நிறுவனமும் காவேரிகலாமன்றத்தினரின் வருகை கஸ்ரங்களை மாற்றியது.

புற்றை தறையாக இருந்த என் நிலப்பரப்பை பக்குவமாக்கி தோட்டம் அமைப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது நீர் வசதி இன்றியிருந்த எனது நிலையுணர்ந்து காவேரி கலாமன்றத்தால் TLMEWநிறுவனத்தின் உதவியுடன் குழாய் கிணறு அமைத்துத்தரப்பட்டதோடு 45 தென்னங் கன்றுகளும் ஏனைய பயன்தரும் மரங்களும் கடந்த 2015ம் ஆண்டில் வழங்கப்பட்டது.

இதன் நிமித்தம் எனது தந்தை மற்றும் சகோதரர்களின் உதவியுடன் நான் தென்னைச் செய்கையினை மேற்கொண்டு இடையில் ஊடுபயிர்களாக பூசணி வெண்டி கத்தரி போன்ற பயிர்கள் உற்பத்தி செய்து கொண்டதோடு அதிலிருந்து நாளாந்த வருமானம் கிடைக்கும். ஒரு நிலை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியிழந்து போன என் வாழ்கையிலும் எனது பிள்ளைகளின் எதிர்காலத்தினையும் உறுதிப்படுத்தி வளமான வாழ்விற்கு வழிகாட்டிகளாக அமைந்த TLMEW நிறுவனத்தினர்க்கும் காவேரி கலா மன்றத்தினர்க்கும் அதன் இயக்குனர் வண T.S. யோசாவா போதகர் அவர்களுக்கும் எனது மனதார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.Thanusha

I am S.Thanusha from Pandaveddai Chulipuram, I am a Young widow with two little children . I was devastated and lost in this world, wondering how to bring up my little girls....?? Thanks to KKM & TLMEW they made it possible my bare land was made a coconut land. I had a Tube well drilled in and about 45 coconut trees were planted on the land. in between these coconut trees I cultivate different types of vegetables which give me day to day income. My father & brothers help me with the day to day work.

KKM & TLMEW with their help brought light in to my life. ,many thanks to Rev.T.S.Joshuva & his team.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வநாதன். எழிலன்

யாழ் பல்கலைக்கழகம்
கலைப்பிரிவு
1ம் வருட மாணவன்.

பாண்டவெட்டை சுழிபுரம் என்னும் புண்ணிய பூமி 1995ல் என்னை தன் மைந்தனாக்கிக் கொண்டது துள்ளி விளையாடி துடுப்படங்கி பள்ளி செல்லும் காலம்வரை பாண்டவெட்டையில் பவனி வந்தேன். ஆரம்பக் கல்வியினை காட்டுப்புலம் வித்தியாலயத்தில் கண்ணியமாய் தொடங்கிவந்தேன் ஆண்டு மூன்று ஆன போது வீட்டின் வறுமை தொடர்ந்து வந்தது நாளாந்தம் தந்தையும் தாயும் கூலிக்கு சென்றே வாழ்நாளை போக்கினோம் நாள் ஒன்று கூலி இன்றேல் பொழுதொன்று உணவில்லை என்ற நிலையிலே பயணித்தோம்.

வறுமையின் பிடியில் இருந்தபோதும் விடாப்பிடியாகக் கல்வியினைக் கற்றுக் கொள்ள TLMEW நிறுவனத்தின் ஊடாக காவேரி கலாமன்றம் எமது கல்வித்திட்டத்திற்கான உதவிகளை செய்வதற்கு முன்வந்தது. வாழ்கையின் வறுமையின் பிடியில் சிக்கிய எனது கல்விப் பயணத்தில் ஒரு மாற்றம் ஏற்பட வாய்ப்புக்கள் தோன்றியது.

காலநீரோட்டத்தில் கல்விப் பயணத்தைத் தொடர்ந்திட வண T.S.யோசுவா போதகரின் ஊடாக யாழ்ப்பாணக்கல்லூரியில் இணைந்து கல்வி கற்கக்கூடிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு ஒரு தனியார் உயர் கல்லூரியில் கல்வி கற்கும் வாய்பால் பல்துறைசார் வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் பலசாதனைகள் நிலைநாட்டக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைகின்றேன் யாழ்ப்பாணக்கல்லூரியிலே கா.பொ.த. சா/த பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரத்திலும் சித்தியடைந்து தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பெரும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

நான்பிறந்துவளர்ந்த கிராமம் மிகவும் வறுமையின் நிலையிலும் கல்வித்தரத்தின் நிலையிலும் குறைந்திருந்த காலப்பகுதியில் எமது கிராமத்திலிருந்து முதல் தடவையாக பல்கலைக்கழகம் செல்லும் மாணவனாக நான் திகழ்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் எனது காலத்தில் எவ்வாறு வறுமையின் மத்தியிலும் விடா முயற்சியோடு கல்விதனை தொடர்ந்து தற்போது இவ்வாறன நிலையினை அடைந்திருக்கின்றேனோ அதே போன்று எமது எதிர் காலங்களின் கல்வி வளர்ச்சிக்கும் என்னால் முடிந்த வரை என்னை அர்ப்பணம் செய்து பல கல்வி மான்களை எமது கிராமத்தில் உருவாக்க எனது எதிர்காலத்தை அர்ப்பணம் செய்து கொள்வதோடு. இந்த சந்தர்ப்பத்தில் நான் மீண்டும் மீண்டும்TLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் அதன் இயக்குனர் வண் T.S.யோசுவா போதகர் அவர்களும் என்வாழ்வில் சந்திக்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்குமாயின் எனது குடும்ப நிலையின் நான் தற்போது ஒரு கூலித் தொழிலாழியாக இருந்திருப்பேன். என் வாழ்வின் வழிகாட்டிளாக இருந்து என் வாழ்விற்கும் ஒளியூட்டிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ***Selvanathan Elilan***



University of Jaffna
1st year university student
Arts Department

I am born to a poor family in Pandaveddai, Chulipuram. My parents earned their living by working daily as laborers' it they didn't get work – No money that means no meals: this was our family situation I attended my village school at this stage I was fortunate to get in to Jaffna college with the help of KKM.

This opened up a bright future for me. It gave me a change not only to excel in education but also in sports. I have entered the arts faculty of Jaffna to graduate myself in arts. I am very proud to be the 1st candidate from our poor village.

I might be 1st one to be educated from our village. but I will make sure that I dedicate my life to see that many more candidates get educated all this is not possible, it not for the help of KKM & TLMEW my sincere Thanks to Rev.T.S.Joshuva & KKM team

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.குணம்


பாண்டவெட்டை காட்டுப்புலத்தை சேர்ந்த க.குணம் ஆகிய நான் எனது குடும்பத்துடன் இணைந்து மிக மகிழ்சியாகவும் சந்தோசமாகவும் தற்போது வாழ்ந்து வருகின்றேன். நான் இன்று இவ்வாறான நிலையில் இருந்தாலும் நான் எனது கடந்து வந்த பாதைகளை நினைத்துப்பார்க்கின்றேன்.

எனது கிராமத்தில் கடற்தொழில் மற்றும் கூலித்தொழில் வேலைகளை செய்து வந்தேன் அவ்வாறான காலாப்பகுதியில் தொழில்கள் நிரந்தரமாக கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைந்தே காணப்பட்டது நானும் எனது மனைவியும் கூலித் தொழிலுக்குச் சென்றே எனது பிள்ளைகளின் செலவுகளை செய்து வந்தோம். இவ்வாறு நிரந்தரத் தொழில் எதுவும் இன்றி பல்வேறு கஸ்ரங்கள் மத்தியில் நாங்கள் குடியிருக்கும் காணியில் கிணறு வசதி இன்றி எமது அன்றாட தேவைகளுக்கான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு வயல்க்காணிக்கே சென்று தண்ணீரைப் பெற்று வந்தோம்.

கடந்த 2015ம் ஆண்டளவில் காவேரி கலா மன்றம் TLMEW நிறுவனத்தின் ஊடாக எமக்கு கிணறு கட்டித்தரப்பட்டதோடு மோட்டர் வசதியும் ஏற்படுத்தித்தரப்பட்டதோடு எனது வளாகத்தில் 42 தென்னங்கன்றுகள் நாட்டப்படுவதற்கான உதவித்திட்டங்கள் செய்து தரப்பட்டது. அத்தோடு நான் தோட்டம் செய்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் இருந்த போதும் தன்நிறைவாக செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு வாட்டம்பம் (தண்ணீர் இறைக்கும் இயந்திரம்) வசதிகள் இல்லாமல் இருந்ததால் காவேரி கலாமன்றத்திற்கூடாக வாட்டம்பம் கொள்வனவு செய்து தரப்பட்டதைத் தொடர்ந்து சிறந்த முறையில் வெங்காயப்பயிர்ச்செய்கை செய்து எனது வருமானத்தைத் கூட்டிக் கொள்ளக்கூடிய நிலையினை அடைந்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் வசதி கிடைத்தமைக்கூடாக நானும் எனது குடும்பத்தினரும் பல்வேறு கஸ்ரத்தின் மத்தியிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம் எங்கள் வாழ்க்கைத்திரத்தின் முன்னேற்றத்திற்கு நீர் எவ்வாறு இன்றியமையாததோ எமது பொருளாதார மேம்பாட்டிற்கும் நீர் இன்றியமையாத தொன்று என்பதை எனது வாழ்வியல் மாற்றத்திற்கூடாக தெரிந்து கொள்ளும் நிலையினை அடைந்துள்ளேன். எனவே இவ்வாறான உதவித்திட்டங்களை செய்து என்வாழ்க்கைக்கு ஊக்கம் கொடுத்து எம்மை வளப்படுத்த ஒத்தாசை புரிந்தTLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K.Kunam

I am K.Kunam from Pandaveddai,Chulipuram. I am very happy living with our family but I cannot stop from looking back from what it was before.

I was an ordinary labor looking for day to day work, can be in the sea or fields whatever I get ,but changes were very remote. my wife also did what even she could get to sea to our daily needs & brought up our children we did not have water facilities in our land. we had go to a far fields to get our daily needed

year 2015 KKM & TLMEW helped was to have a well with the necessary water pump fixed to it. also it helped us to plant about 45 coconut trees. in between the coconut trees. I cultivate vegetable which gives us enough day to day income.

We are very grateful & thankful to KKM & TLMEW thank you Rev.T.S.Joshuva &Team.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராசா

காட்டுப்புலம்.

காட்டுப்புலம் சுழிபுரத்தை சொந்தமாகக்கொண்ட நாம் இன்று எனது குடும்பத்துடன் இணைந்து மகிழ்ச்சியாகவும் சந்தோசமாகவும் எமது வாழ்கைப் பயணத்தை முன்நகர்த்திச் செல்கின்றோம் என்றால் அதற்கான பக்கபலமாக இருந்தவர்களை நாம் ஒருகணம் நினைத்துப் பார்க்கையில்.

காட்டுப்புலத்தில் பிறந்து யுத்தம் காரணமாக பல சிரமப்பட்டு பல்வேறு பிரதேசங்களில் இடம்பெயர்ந்து அல்லல் பட்டு பின் மீள்குடியேற்றப்பட்ட போதும் நாம் காட்டுப்புலம் பகுதியில் குடியேறிய போது எமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தண்ணீர் மிகவும் தட்டுப்பாடாக இருந்தது நாங்கள் வயல் கிணறுகளில் தண்ணீரை எடுத்து குளிப்பதற்கும் சமைப்பதற்கும் பாவித்து வந்தோம். வீட்டில் வளாகத்தை குளிர்ச்சியாக்குவதற்கு கன்றுகள் நாட்டிக் கொள்வதற்கெல்லாம் தண்ணீர் இன்றி சிரமப்பட்டோம்.

அவ்வாறான காலகட்டத்திலே காவேரி கலாமன்றம் TLMEW நிறுவனத்திற்கூடாக எமக்கு குழாய் கிணறு அமைத்து தொட்டிகட்டி மோட்டர் பூட்டி தந்ததோடு தென்னங்கன்றுகளும் தரப்பட்டது.

தாகத்தின் மத்தியில் இருந்த எமக்கு தண்ணீர் கிடைத்தது போன்றுபல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத தண்ணீர் என்றியிருந்த நாம் இதற்கூடாக தென்னைகளை சிறப்பாக உற்பத்தி செய்து வருவதோடு வாழைப்பயிர்செய்கையும் மேற்கொண்டுள்ளோம் . தற்போது வாழை தென்னை என பல்வேறு பயிர்கள் எமது வளாகத்தில் குளிர்ச்சியாக காட்சி கொடுக்கின்றது.

எனது வாழ்க்கையில் பெரிதும் சிரமப்பட்ட பொழுது வனாந்தரமாக வெட்டை வெளியாக இருந்த எமது காணி இப்போது அழகான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ச்சியான ஒரு சூழலை எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. இதனோடு நாங்கள் ஊடுபயிர்கள் செய்கைகள் செய்தும் வருமானம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

அத்தோடு எமக்கு நாட்டுக்கோழி வளர்த்தக் கொள்வதற்கும் எமது பிள்ளைகளின் உடல் போசாக்கினை மேம்படுத்திக் கொள்வதற்குமாக எமக்கு கோழிக்கூடு செய்து தரப்பட்டு கோழி வளர்ப்பிற்கு ஊக்குவிப்பு செய்து கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கோழி வளர்ப்பும் செய்து வருகின்றோம். அதனூடாகவும் எமக்கு வருமானம் கிடைத்து வருகின்றது.

எனவே வறுமையிலும் வறட்சியிலும் வாடிய எங்கள் வாழ்விற்கு வளமான எதிர் காலத்தை ஏற்படுத்தித்தந்த TLMEW நிறுவத்திற்கும் காவேரி கலாமன்றத்திற்கும் அதன் இயக்குனர் வண T.S. யோசுவா போதகர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sivarasa



our family is now happy settled in Kaddupulam after years of moving from place to place owing to the war. when we first moved into our land we did not have any water we had to go to far of field to collect water for drinking cooking ete.

thanks to KKM & TLMEW we were gifted with a Tube well & motor water pump. This was a blessing that it gave us easy access to water. we were gifted with coconut plants. now we have vegetables plants growing additionally which is a good source of income.

now we are encouraged to rear country birds. which we are happily rearing thanks to KKM & TLMEW .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம.யோகேஸ்வரன்

காட்டுப்புலம்
சுழிபுரம்.

இருளில் வெளிச்சத்தைக் கண்டேன் வெளியில் வந்தேன். அந்த வெளிச்சத்தில் நான் என்னை அறிந்து கொண்டேன். நான் இப்போது மிகவும் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் எனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றேன் அவ்வாறு வாழ்ந்து வரும் கனப் பொழுதிலும் கடந்து வந்த எம் பாதையை நினைத்துப் பார்க்கின்றேன்.

எனக்குள் இருந்த திறன்களை வெளிப்படுத்திக் கொள்ள தண்ணீர் இன்றி தவித்தேன் தண்ணீருக்காக அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கென நான் பல்வேறு சிரமங்கள் பட்டு வயல் கிணறுகளில் சென்று தண்ணீரை எடுத்து எமது தேவைகளை பூர்த்தி செய்து வந்தேன் எனது நாளாந்த தேவைக்கான நீரைப் பெற்றுக் கொள்வதிலே சிரமப்பட்ட போது எமது காணியில் பயிர்செய்கை செய்து கொள்வதை பற்றி எம்மால் என்னிப்பார்க்கவே முடியாத நிலையில் இருந்தோம் வெய்யில் காலத்தில் வாட்டும் வெய்யிலில் தற்காலிக குடிசையில் குடியிருந்தோம் இவ்வாறு எமது வாழ்வியல் போராட்டம் தொடர்ந்திருந்த காலப்பகுதியிலே TLMEW நிறுவனம் காவேரி கலா மன்றத்தின் உதவியோடு எமக்கு குழாய் நீர் கிணறு அமைத்து தந்துதவியது. அத்தோடு நின்று விடாது எமது வாழ்க்கைநிலையில் மேம்படுத்திக் கொள்ளும்வகையில் தென்னை உற்பத்தியினை மேற்கொள்ளும் விதத்தில் தென்னங்கன்றுகள் மற்றும் பயன்தரு மரங்கள் எமக்கு கொடுக்கப்பட்டது.

தண்ணீர் கிடைத்ததே எமக்கு பெரிய புண்ணியம் என்று எண்ணிய நாம் தண்ணீருக்கூடாக எமது காணியை மேம்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்தோம் தென்னைகளை நன்றாக உற்பத்தி செய்து அதன் இடையே வாழைக் கன்றுகள் நாட்டப்பட்டு தற்போது சோலையாக எமது காணி காணப்படுகின்றது.

நாம் தற்போது ஊடுபயிர்களும் செய்து வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளோம் எனவே எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ளும் வகையில் கோழிக்கூடும் எமக்கு தரப்பட்டுள்ளது நாம் கோழி வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றோம் அதனூடாக வருமானம் பெற்றுக் கொள்வதோடு எமது பிள்ளைகளின் போசாக்கினையும் நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியவாறு உள்ளது. எனவே எமக்கு இத்திட்டத்தை தந்துதவிய TLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் அதன் இயக்குர் வண T.S. யோகவா போதகருக்கும் எமது மன்மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *M.Yogeswaran*

**Kaddupulam**

our sincere thanks to KKM&TLMEW for having helped us by providing Tube well we really appreciate this great help as it has made not only our life easy, but has encourage us to grow coconut trees , lots vegetables and banana trees. we are getting a lot of income through selling fruits of vegetables.

Now we are being encouraged to rare country birds by providing case to chicks this has improved our children nutrition. our gratitude thanks to Rev.T.S.Joshuva and team.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ.பாலசிங்கம்

காட்டுப்புலம் சுழிபுரம் கிராமத்தில் வசித்துவந்த நாங்கள் கடந்த யுத்தநிலைகாரணத்தால் பல்வேறு இடப்பெயர்வுகளின் மத்தியில் மீளவும் எமது சொந்த கிராமத்திற்கு வந்து குடியேறி வசித்து வருகின்றோம். இன்று எமது காணியில் நாம் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றோம் நாங்கள் இவ்வாறான நிலையில் வாழ்ந்து வரும் போது நாம் கடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்கையில்.

நாம் மீள்குடியேற்றத்தின் பின் எமது காணியில் குடியிருக்க வரும் போது பற்றைகள் அடர்ந்து காணப்பட்டது நாம் மிகுந்த சிரமத்தின் மத்தியில்துப்புரவு செய்து குடியிருந்த போது எமக்கு நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளமுடியாத நிலையிலிருந்தோம் எமது தண்ணீர் தேவைக்காக வயல் கிணறுகளுக்குச் சென்றே தண்ணீர் எடுத்து வந்து பயன்படுத்தி வந்தோம். அவ்வாறான கால கட்டத்திலே தான் TLMEW நிறுவனத்தின் உதவியுடன் காவேரி கலா மன்றம் எமக்கு குளாய் கிணறு அமைத்து தந்ததோடு எமது காணியில் தென்னை பயிற் செய்கையினை மேம்படுத்திக் கொண்டு எமது பொருளாதாரத்தை மேம்படத்தும் நோக்கில் தென்னங்கன்றுகள் தரப்பட்டதோடு மேலும் பல பயன் தரு மரக்கன்றுகள் தரப்பட்டது.

தற்போது எமது குடும்ப வாழ்க்கைத் தரத்தை மேப்படுத்தும் முகமாக காவேரி கலா மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் நாம் சிறந்த முறையில் தற்போது பயன் பெற்று வருகின்றோம் தற்போது எமது காணியில் தென்னங்கன்றுகள் மற்றும் பயன் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுபயிர்கள் வளர்த்தும் அதனுடன் அன்றாடம் கூலித்தொழில் செய்தும் வாழ்க்கைச் செலவினை மேம்படுத்திவரும் இக்கால கட்டத்தில் தங்போது எமது காணியிலே நாங்கள் சிறு தோட்டங்கள் செய்து பயன் பெற்று வருகின்றோம். இவ் உதவித்திட்டத்தை தந்துதவிய TLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் அதன் இயக்குனர் T.S.யோசுவா போதகர் அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.Balasingam

we as a family is happy to come back to our land after being away for a long time. War is over ,our lands are all neglected we are faced with great difficulties, no source of water in our land . We have to go to far fields to fetch water.

Thanks to KKM & TLMEW that we have a Tube well in our land. with the Tube well giving us water. we have started planting coconut trees and also lot of vegetables plants we have improved our living conditions. Thank you Rev.T.S.Joshuva and team.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதராஜா

காட்டுப்புலம் சுழிரத்தில் வசித்துவரும் வரும் வரதராஜா ஆகிய நான் தற்போது மீள் குடியேறி தற்காலிக வீட்டில் எனது குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றேன் இவ்வாறான காலப்பகுதியில் நாங்கள் கடந்து வந்த எமது வாழ்க்கை பயணத்தை நோக்குவோமானால்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றத்தின் பின் நாம் எமது சிறுபிள்ளைகளுடன் இங்கு வந்து குடியேறிய நாம் எமது அன்றாத தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு மிகவும் கஸ்ரப்பட்டிருந்தோம் தண்ணீர் இல்லாது எமது தேவைகளை பூர்த்தி செய்த கொள்வதற்கு வயல்காணியில் உள்ள கிணறுகளில் சென்று தண்ணீர் பெற்றுவந்தே எமது தேவைகளை பூர்த்தி செய்து வந்தோம்.

நான் கூலித் தொழில் செய்து வருவதால் கிணறு அமைத்து தண்ணீர் பெற்றுக் கொள்ள எனக்கு எனது பொருளாதார வசதி இல்லாது இருந்தேன். ஆந்த காலப்பகுதியில் TLMEW நிறுவனத்தின் ஊடாக காவேரி கலா மன்றம் எமக்கு குளாய் கிணறு அமைப்பதற்கான உதவி செய்து தந்தமையோடு எமது காணியில் தென்னை மற்றும் பயன் தரு மரக்கன்றுகள் தரப்பட்டு தற்போது செழிப்பாக வளர்ந்து நிற்கின்றது. நாங்கள் இதன் ஊடு பயிர் செய்கை தெய்து வருமானம் பெற்று வருகின்றோம்.

தண்ணீர் வசதிகிடைத்தமை எமது பொருளாதாரத்தில் வளர்ச்சியடைவதற்கு உந்துசக்கியாக அமைந்திருக்கின்றது தற்போது வாழை மிகச் செழிப்பாக வளர்ந்து பயன் தரு நிலையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமக்கு இத்திட்டத்தை உதவி செய்த TLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் அதன் இயக்குனர் வண T.S. யோசுவா போதகருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவத்துக் கொள்ளுகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Varatharaja*

After wondering from place to place we are happy to be settled in our land. During the war time we went through lot of hard ships wondering from place to place.

Though we settled down, still we underwent lot of hard ships because of lack of water.

Thanks to KKM & TLMEW which helped us with a Tube well and lots of beneficial plants. Now we have many coconut plants, lots of vegetables plants & banana trees . They are all lush and beginning give us benefits. We are very grateful to Rev.T.S.Joshuva & his team.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.சிறீதரன்

பாண்டவெட்டை,

சுமிபுரம்.

பாண்டவெட்டை காட்டுப்புலத்தை சேர்ந்த க.சிறீதரன் ஆகிய நான் எனது குடும்பத்துடன் இணைந்து மிக மகிழ்சியாகவும் சந்தோசமாகவும் தற்போது வாழ்ந்து வருகின்றேன். நான் இன்று இவ்வாறான நிலையில் இருந்தாலும் நான் எனது கடந்து வந்த பாதைகளை நினைத்துப்பார்க்கின்றேன்.

நான் கூலித்தொழில் வேலைகளை செய்து வந்தேன் அவ்வாறான காலாப்பகுதியில் தொழில்கள் நிரந்தரமாக கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைந்தே காணப்பட்டது. நானும் எனது மனைவியும் கூலித் தொழிலுக்குச் சென்றே எனது பிள்ளைகளின் செலவுகளை செய்து வந்தோம். இவ்வாறு நிரந்தரத் தொழில் எதுவும் இன்றி பல்வேறு கஸ்ரங்கள் மத்தியில் நாங்கள் குடியிருக்கும் காணியில் கிணறு வசதி இன்றி எமது அன்றாட தேவைகளுக்கான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு வயல்க்காணிக்கே சென்று தண்ணீரைப் பெற்று வந்தோம்.

கடந்த 2015ம் ஆண்டளவில் காவேரி கலா மன்றம் TLMEW நிறுவனத்தின் ஊடாக எமக்கு கிணறு கட்டித்தரப்பட்டதோடு மோட்டர் வசதியும் ஏற்படுத்தித்தரப்பட்டதோடு எனது வளாகத்தில் 45 தென்னங்கன்றுகள் நாட்டப்படுவதற்கான உதவித்திட்டங்கள் செய்து தரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நான் காவேரி கலா மன்றத்திற்கூடாக தொடர்ந்து சிறந்த முறையில் வெங்காயப்பயிற்செய்கை செய்து எனது வருமானத்தைத் கூட்டிக் கொள்ளக்கூடிய நிலையினை அடைந்துள்ளேன் தண்ணீர் வசதி கிடைத்தமைக்கூடாக நானும் எனது குடும்பத்தினரும் பல்வேறு கஸ்ரத்தின் மத்தியிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம் எங்கள் வாழ்க்கைதிரத்தின் முன்னேற்றத்திற்கு நீர் எவ்வாறு இன்றியமையாததோ எமது பொருளாதார மேம்பாட்டிற்கும் நீர் இன்றியமையாத தொன்று என்பதை எனது வாழ்வியல் மாற்றத்திற்கூடாக தெரிந்து கொள்ளும் நிலையினை அடைந்துள்ளேன். எனவே இவ்வாறான உதவித்திட்டங்களை செய்து என்வாழ்க்கைக்கு உரமூட்டி எம்மை வளப்படுத்த ஒத்தாசை புரிந்தTLMEW நிறுவனத்திற்கும் காவேரி கலா மன்றத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K.Sritharan

I am Sritharanfrom Pandaveddai,Chulipuram. I am very happy living with our family but I cannot stop from looking back from what it was before.

I was an ordinary labor looking for day to day work, can be in the sea or fields whatever I get ,but changes were very remote. my wife also did what even she could get to sea to our daily needs & brought up our children we did not have water facilities in our land. we had go to a far fields to get our daily needed

year 2015 KKM & TLMEW helped was to have a well with the necessary water pump fixed to it. also it helped us to plant about 45 coconut trees. In between the coconut trees. I cultivate vegetable which gives us enough day to day income. We are very grateful & thankful to KKM & TLMEW thank you Rev.T.S.Joshuva & Team

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org